PR 149 நாள் : 02-04-17

# பத்திரிக்கை செய்தி

## காஞ்சிபுரம் மாவட்டம்

## பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்

## *முகாம் நாள் 02.04.2017 மற்றும் 30.04.2017*

போலியோ என்னும் இளம்பிள்ளைவாத நோயை முற்றிலும் ஒழித்திட கடந்த 20 வருடங்களாக போலியோ சொட்டு மருந்து ஐந்து வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. எதிர் வருகின்ற 02.04.2017 ஞாயிற்றுக் கிழமை அன்று **பல்ஸ் போலியோ** முதல் தவணை சொட்டு மருந்து வழங்கும் முகாம் சிறப்பாக நடத்தப்பட உள்ளது. இரண்டாவது தவணையாக வருகின்ற 30.04.2017 ஞாயிற்றுக் கிழமை அன்று போலியோ சொட்டு மருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1903 மையங்களில் சுமார் 3,29,695 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. 9 அரசு மருத்துவமனைகள், 57 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், 151 துணை சுகாதார நிலையங்கள், 1342 சத்துணவு மையங்கள் 107 அரசு பள்ளிகளில், 7 தனியார் மருத்துவனைகள், 17 சமுதாய கூடங்கள், 25 நடமாடும் மருத்துவக்குழுக்கள், 75 பேருந்து நிலையங்கள், 3 சுங்கசாவடிகள் (ஸ்ரீபெரும்புதூர், அச்சரப்பாக்கம், செங்கல்பட்டு) மற்றும் 110 தேர்வு செய்யப்பட்ட பிற இடங்களில் இந்த போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும். இந்த முகாமில் 754 பொது சுகாதாரத் துறை பணியாளர்கள், 3653 சத்துணவு பணியாளர்கள், 3243 தன்னார்வலர்கள் ஆக மொத்தம் 7650 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எனவே பொது மக்கள் தவறாமல் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி ஏற்கனவே சொட்டு மருந்து வழங்கப்பட்டிருப்பினும், இம்முறையும் ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கி போலியோ என்னும் இளம்பிள்ளைவாத நோயை முற்றிலும் ஒழித்திட மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.